**இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தி செயற்திட்டம் - கூறு- I - 2015**

---

இராண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் - கூறு - I இன் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கை மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 5228 - எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முன்னாள் சுகாதார அமைச்சும் தற்போதைய சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் தேசிய மட்டத்தில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த அதேநேரம் மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சினால் மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம் 2013-2017 வரையான ஆண்டு காலத்திற்காக தேசிய சுகாதார அபிவிருத்தி திட்டத்தை அமுலாக்குவதற்கான நிதி உதவியை வழங்குவதற்காக செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது. ஊட்டச்சத்தின்மை மற்றும் தொடர்பில்லா தொற்றுநோய்கள் என்பவற்றின் சவால்களிற்கு சிறந்த பதிலளிப்பதற்கான இயலுமைக்காக பொதுச் சுகாதாரத்தின் செயலாற்றலின் நியமத்தை தரமுயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் கூறு - I இன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 25,270 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 129.8 மில்லியன் (ஐ.அ.டொலர் 200 மில்லியன்) ஆகும். அதில் ரூபா 24,006 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 123.31 மில்லியன் (ஐ.அ.டொலர் 190 மில்லியன்) செயற்திட்டத்தின் - கூறு- I இன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 யூலை 01 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. இந்த அறிக்கையானது தேசிய மட்டத்தில் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தனியாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்தின் - கூறு- I இற்கான நிதிக்கூற்று என்பவற்றின் மீதான கருத்துக்களை உள்ளடக்கியிருந்தது.

**1.3 நிதி அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் ஒதுக்கீட்டு கணக்குகளின் பூர்த்தியாக்கலிலிருந்த இந்த நிதி அறிக்கையை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க தயாரித்து நியாயபூர்வமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதி அறிக்கையை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதி அறிக்கை மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதி அறிக்கை பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதி அறிக்கையில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது.

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதி அறிக்கையின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதி அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதி அறிக்கையின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதி அறிக்கையில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் ஏற்பட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன சுகாதாரத்துறையின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதி அறிக்கையானது நிதிப் பிரமாணம் 150 மற்றும் பொதுத் திறைசேரியின் 2015 திசெம்பர் 10 ஆம் திகதிய 245/2015 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கை என்பவற்றிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டிற்கான சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் ஒதுக்கீட்டு கணக்குகளின் அடிப்படையில் நிதி அறிக்கையானது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 2015 திசெம்பர் 10 ஆந் திகதிய 245/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட ஒதுக்கீட்டு கணக்குகள் திறைசேரி கணனி அச்சீட்டுத் தாள்கள், வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள், சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் பேணப்பட்ட புத்தகங்கள், ஏடுகள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றுடன் உடன்பட்டிருந்தன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2014 மே 21 ஆம் திகதிய டிஎம்எஸ்/சீ/1/16/செயற்திட்டம் ஆம் இலக்க கடிதத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட பணிப்புரைகளுக்கு முரணாக, வரிசை அமைச்சிற்கு இணைக்கப்பட்டுள்ள செயற்திட்டப் பணிப்பாளர், கணக்காளர் மற்றும் செயற்திட்டத்தின் அலுவலர்கள் உள்ளடங்கிய செயற்திட்டத்தின் முக்கிய பதவியணியர் நிலைகள் முழுநேர அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுவதற்கு பதிலாக பதிற்கடமை அடிப்படையில் செயற்திட்டத்தால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

#### 2.2.2 நிதி உடன்பாடுகள் இணங்காமை

செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், 2015 பெப்பரவரி 28 ஆம் திகதியில் ஆரம்பித்து செயற்திட்ட காலப்பகுதி இறுதிவரை ஒவ்வொரு வருடமும் சுற்றாடல் முகாமைத்துவ கட்டமைப்பின் செயலாற்றலை மதிப்பிடுவதன் மூலம் சுற்றாடல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். எனினும், செயற்திட்டமானது இத் தேவைப்பாடுகளுடன் இணங்கியிருக்காததுடன் அதற்கமைய மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

செயற்திட்டத்தால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம், நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஒதுக்கீடு மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளித்தல் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | | | | | | | |
| கூறு-1 | 190 | 24,006 | 2,670 | 14.40 | 1,848 | 28.18 | 3,618 |
| | 190 | 24,006 | 2,670 | 14.40 | 1,848 | 28.18 | 3,618 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 5,617 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 43.75 மில்லியன் மீளளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 2,670 மில்லியன் தொகை மாத்திரமே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேற்குறிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டில், 69 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,848 மில்லியன் தொகை மாத்திரமே மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 24,006 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 190 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 14.8 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 3,618 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 28.18 மில்லியன் மாத்திரமே 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, மீதமுள்ள செயற்திட்டத்தின் 03 ஆண்டுகள் காலப்பகுதியின் போது முழு ஒதுக்கீட்டையும் பயன்படுத்தும் சாத்தியத்தன்மை ஐயத்திற்கிடமாகவுள்ளது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தின் கீழ் அடையப்பட வேண்டிய பௌதீக இலக்குகள் 03 பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகள் மற்றும் 11 பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. தெரிவு பரீட்சிப்பில் 11 பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டிகளில் 03 பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளினதும் 08 பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டிகளினதும் விரும்பிய பெறுபேறுகள் அடையப்பட்டிருந்தது என வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஏனைய 03 பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டிகளின் கீழ் குறிப்பிடப்பட்ட இலக்குகளின் அடைதல் மீதான மந்தமான முன்னேற்றம் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) சுகாதாரத்துறையின் பயிற்சி இயலுமைகளின் முன்னேற்றத்திற்கான பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டி – 7 இன் பிரகாரம், நாடு முழுவதிலுமுள்ள 34 பயிற்சி நிறுவகங்களில் 07 பயிற்சி நிறுவகங்கள் தேசிய நியமங்களை எதிர்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது முன்னேற்றமடைய செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

எனினும், 05 பயிற்சி நிறுவகங்களால் முன்னேற்றத்திற்கான நியமங்கள் வரை அடைய முடிந்திருந்தது.

(ஆ) பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டி – 9 இன் கீழ் மீளாய்வாண்டின் போது 13,577 புதிய காசநோயாளிகள் குறைக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் 9,246 நோயாளிகள் மாத்திரமே குறைக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுப் பார்வையின் பிரகாரம், புதிய காசநோயாளிகளின் இனங்காணலானது நோய்களை இனங்காணுதலிலும் அவற்றின் மீதான தொடர்ச்சியான சிகிச்சைகள் தொடர்பாக நோயாளிகளை அறிவூட்டுவதில் தங்கியுள்ளது. ஆகையால், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், ஆரம்பத்திலேயே நோய்களை குறைத்தல் மற்றும் அவற்றின் மீதான சிகிச்சைகள் போன்றவற்றிக்கான வசதிகளை முன்னேற்றுதல் போன்றவற்றிற்காக அதிகளவு கவனம் செலுத்த வேண்டியிருந்தது.

(இ) பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டி - 11 இன் பிரகாரம், 354 உருப்படிகளை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட மொத்த ஒப்பந்தங்களில், 2015 இன் முதல் 09 மாதங்களின் போது ஒப்பந்தங்களின் 50 சதவீதத்திற்கு மேல் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அக் காலப்பகுதியில் மீளாய்வாண்டின் 167 உருப்படிகளை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தங்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிக்காலாண்டின் போது அக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் மீதான சிக்கனத்தன்மை, வினைத்திறன், செயற்திறன் மற்றும் வெளிப்படுத்தல் தன்மை போன்ற விடயங்கள் மீது குறைந்த கவனிப்பை செலுத்துவதன் மூலம் மிகுதி 187 உருப்படிகளை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தது என இது சுட்டிக்காட்டியிருந்தது.

### 3.3 ஒப்பந்தம் நிர்வாகம்

-------------------------------

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 14 நேரியல் வேகமூட்டிகள், 08 சீரி சிமுலேட்டர்கள் மற்றும் 08 விறேசிதெறபி இயந்திரங்கள் ஆகிய புற்று நோய்க்கான சிகிச்சையளிப்பு உபகரணங்களை விநியோகிப்பதற்காக 02 வெளிநாட்டு வழங்குனர்களால் 2010 செப்தெம்பர் 09 இல் மேற்கொள்ளப்பட்ட வேண்டப்படாத பிரேரணைகள் மற்றும் அண்ணளவாக ரூபா 6,853.46 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 53.38 மில்லியன் கிரயத்திலான கொங்றீற் பதுங்குகுழிகளை நிர்மாணித்தல் உள்ளடங்கியதாக அத்தகைய உபகரணங்களின் தரகிடல் என்பன பிரேரணைகளின் நிதித் திட்டத்தில் உள்ளடங்கியிருந்த ஏற்றுக்கொள்ளமுடியாத நிபந்தனை காரணமாக மறுக்கப்பட்டிருந்தது. எனினும், அமைச்சரவை 2015 ஏப்ரல் 30 இல் இடம்பெற்ற அதன் கூட்டத்தில் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் அவ் நோக்கத்திற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டை பயன்படுத்துவதற்கும் அனுமதியை வழங்கியிருந்தது. வரிசை அமைச்சு புதிய விலை மனுக்களை சர்வதேசரீதியில் கோராமல் உபகரணங்களின் தரகு கிரயம் உள்ளடக்கப்பட்டிருந்த அதே விலையில் வெளிநாட்டு வழங்குனருக்கு ஒப்பந்தத்தை வழங்கியிருந்தது. ஆகையால் ரூபா 759.75 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 6.23 மில்லியன் தொகை நேரியல் வேகமூட்டிகளை கொள்வனவு செய்வதற்காக 2015 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்டிருந்தது.